பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை 27.08.2023 கதிர் 289

### மேற்குலகிற்கு எதிராக

## தமிழ்-சிங்கள மக்கள் இணைய வேண்டிய 2ஆவது சுதந்திரப் போராட்டம் விரைவில்

### எல்லே குணவங்ச தேரர் தெரிவிப்பு

அமெரிக்கா, உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இரண்டாவது சுதந்திர போராட்டத்திற்காக சிங்கள, தமிழ் மக்கள் மீண்டும் கைகோர்க்க வேண்டிய நிலைமைகள் விரைவில் ஏற்படும் என்று எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியா ளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

தேர்தல் நெருங்குகின்ற பொழுது தெற்கிலும் அரசியல்வாதிகளால் கடும்போக்கு சித்தாந்தங்கள் பேசப்படுகின்றன. அதேபோல வடக்கிலும் அரசியல்வாதிகளால் கடும்போக்குசித்தாந்தங்கள் எழுப்பப்படுகின்றன இதனால் எந்த விதமான நன்மைகளும் கிடைப்பதில்லை.

தேர்தல் காலங்களில்தான் தமது நாடு, தத்தமது இனம் பற்றிய சிந்தனைகள் எல்லாம் வெளியிடப்படுகின்றன. அதுவரையில் ☞2

### இது ரகசியம் அல்ல!

கடும் வறட்சியும் அதிக வெப்பமும் வாட்டி வதைக்கின்றன. நண்பகலானால் வெளியே போக முடியவில்லை. நாளாந்தம் பருகும் தண்ணீரின் அளவை அதிகரித்தும் நாளுக்கு இரண்டு தடவைகள் குளித்தும் உடல் வெப்பநிலையைச் சீராகப் பேணுங்கள் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றார்கள். ஆனால், அதற்கெல்லாம் இந்த வறட்சிக் காலத்தில் தண்ணீரை எங்கிருந்து பெறுவது என்பதுதான் பிரச்சினையே!

யாழ். மாவட்டத்தில் மட்டும் வறட்சியால் இதுவரையில் 70 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலகம் கூறுகின்றது. வறட்சி என்றதுமே தண்ணீர் இல்லை என்பதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது. குறிப்பாகக் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை என்பதுதான் பெரும்பாலும் உணரப் படுகின்றது. ஆறுகளை, பெரும் நீர்த்தேக்கங்களை நம்பி மேற்கொள்ளப்பட்ட விவசாய ☞2

### பலமானவர்களின் விளையாட்டு மைதானமாகி

## பிளவுபடும் நிலையில் இருக்கிறது இலங்கை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

நாடு பிளவுபடும் நிலையில் இருக்கிறது. மக்கள் ஆணையில்லாத ஆட்சியாளர்கள் பலவீனமான நிலையில் இருப்பதால் பலம் வாய்ந்தவர்களின் விளையாட்டுமைதானமாக நாடு மாறி வருகின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ☞2

### இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளிடம்

# ரணிலின் ஆட்சி முடியும்போது நாடு முழுதாக இறைமையை இழக்கும்

### ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க எச்சரிக்கை

ஜனாதிபதி ரணிலின் ஆட்சி முடியும்போது இலங்கை தனது இறைமையை இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளிடம் முழுமையாக இழக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் ஜேவிபி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.இதன் மூலம் நாடு மீண்டும் காலனித்துவத்துக்குள் தள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று 'மக்கள் நலன் சாராத ஆட்சியை தோற்கடிக்கும் சுதந்திரப் போராட்டத்தின் நவீன சொற்பொழிவு' என்ற தலைப்பில் நடைபெற்ற விசேட மாநாட்டில் ☞2

### 2024 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு மீதான மீளாய்வு

#### ஓகஸ்ட் 28 தொடங்குகிறது

2024ஆம்ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகள்மீதானமீளாய்வு ஒகஸ்ட்28தொடங்கும்என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

யட்டியந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில் அடுத்த ஆண்டும் சவாலான வரவு-செலவுத் திட்டத்தையே சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலையில் இருந்து சாதகமான திசையை நோக்கி நகர்த்துவதற்குத் ☞2

### தற்போதைய கடும் வறட்சி தொடர்ந்தால் 4 வாரங்களுக்கு மட்டுமே நீர் மின்சாரம்

#### உற்பத்தி 15 சதவீதமாகக் குறைந்துள்ளதாக மின்சார சபை அறிவிப்பு

நீர் மின் உற்பத்தி 15 சத வீதமாகக் குறைந்துள்ள நிலையில் வறட்சியான காலநிலை தொடருமானால் மேலும் 4 வாரங்களுக்கு மட்டுமே நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து இலங்கை மின்சாரசபை மேலும்தெரிவித்துள்ளதாவது:

தொடரும்வறட்சிகாரணமாக சமனல ஏரி நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு ஒரு சதவீதமாகவும், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 21சதவீதமாகம், மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 35 சதவீதமாகவும், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 25 சதவீதமாகவும் குறைந்துள்ளது. ☞2

## கடன் பொறியிலிருந்து 2048 வரை இலங்கையால் மீளவே முடியாது

### அமைச்சர் பந்துல திட்டவட்டம்

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றாது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியாது, 2048வரை கடன்பொறியிலிருந்துமீளவும் முடியாதுஎன்றுஊடகத்துறை மற்றும் போக்குவரத்துறை அமைச்சர் கலாநிதி.பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் ஜனாதிபதி மாற்றம் அடைந்தாலும் 2048 ஆம் ஆண்டுவரை சிக்கியுள்ள கடன் பொறியில் இருந்து மீள முடியாது. அதிலிருந்து விடுபட முடியாத நிலைமை ஒன்று காணப்படுகிறது. அதனாலேயே அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால்இலங்கைக்கு எரிபொருள்கிடைத்திருக்காது. விவசாயத்திற்கான உரம் கிடைத்திருக்காது. எரிவாயு கிடைத்திருக்காது. உணவுப் பொருட்கள் இயந்திரங்கள் எதுவுமே கிடைத்திருக்காது.

நாட்டை யார் பொறுப்பேற்று இருந்தாலும் நாடு ஒரு மாதத்திற்குள் மீண்டும் முடங்கியிருக்கும். சர்வதேச ரீதியாக கடன்களை மீளச் செலுத்த முடியாது வங்குரோத்துஅடைந்தநாடாக ☞2

## பிக்குகளை முடக்கி வீதிக்கு வரவிடாமல் தடுக்க முயற்சிக்கின்றதாம் ஆளும் தரப்பு

நாட்டின் அரசியலில் பிக்குகள் தலையிடுவார்கள் என்ற அச்சம் காரணமாக, பிக்குகளை முடக்கி வீதிகளில் இறங்கவிடாமல் தடுக்கும் முயற்சிகளில் ஆளும் தரப்பு ஈடுபடுகின்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றார் இலங்கைராமாஞ்ஞபீடத்தின் அத்தங்கனே சாசனரதன தேரர்.

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் 'மக்கள் நலன் சாராத ஆட்சியை தோற்கடிக்கும் சுதந்திரப் போராட்டத்தின் நவீன சொற்பொழிவு' என்ற தலைப்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற விசேட மாநாட்டின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் இருக்கின்ற நிலைமையை மாற்றி அமைக்கின்ற செயற்பாடுகளில் பௌத்த தேரர்கள் பங்கேற்ற வேண்டும் என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தேரர்கள் பங்கேற்பார்கள் என்கின்ற அச்சம் ஆட்சியாளர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் ஆட்சியாளர்கள் பிக்குகளை முடக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். அவர்கள் வீதியில் அணிவகுத்து செல்ல முடியாத நிலைமையை உருவாக்குவதற்கு முனைகின்றார்கள்.

எம்மைப்பொறுத்தவரையில் நாட்டில் மக்கள் சார்ந்த ஆட்சி ஒன்று உருவாக்கப்படவேண்டும். நாட்டினுடைய ஜனாதிபதி இந்த கட்சி சார்ந்தவர் அந்தக் கட்சி சார்ந்தவர் என்று இருப்பதை விடவும் மக்களுடைய ஜனா திபதி என்கின்றநிலைமைஉருவாக்கப்படவேண்டும்.

தற்பொழுது நாட்டில் அரசியல் கட்சி சார்ந்தவர்களுக்கே தொழில்வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அது தேர்தல் நலன்களை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. அதேநேரத்தில் தற்பொழுது ஆட்சியில் இருப்பவர்கள் தமது தரப்பினருக்குக் காணிகளை வழங்குகிறார்கள்.

இவ்விதமான ஆட்சி எமக்குத் தேவையில்லை அனைத்து மக்களும் சமமாக மதிக்கப்பட்டு அவர்களுக்குக் காணிகள், தொழில் வாய்ப்புகள் வழங்குகின்ற ஆளும் தரப்பே எமக்குத் தேவையாக உள்ளது. அவ்வாறான ஆட்சியை உருவாக்குவதற்காக நாம் ஒன்றுபட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது - என்றார்.

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை எதிர்த்து யாழ். செயலகம் முன்பாகவும் போராட்டம்

### நாளை அனைவரையும் திரள 9 தொழிற்சங்கங்கள் அழைப்பு

(ந.லோகதயாளன்.)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்காக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ஈபிஎவ்/ ஈரிஎவ்) ஆகியவற்றை ஆளும் தரப்பு பயன்படுத்த முனைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்வகையில்யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகத்தொழிற்சங்கங்கள் இணைந்து போராட்டம் நடத்தவுள்ளன.

நாளை திங்கட்கிழமை இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று 9 தொழிற் சங்கங்கள்இணைந்துஅறிவித்துள்ளன. இது தொடர்பான அவற்றின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைச்சரவையில்2023 ஜூலை 01நிறைவேற்றப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர்சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை நம்பிக்கை நிதி ஆகியவற்றை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த ஆளும் தரப்பினால்தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினை ☞2

## இனி இது .....

நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதையும் ஊகிக்க முடிகின்றது. ஆனால், அதையெல்லாம் தாண்டி வறட்சியின் பாதிப்பு தாண்டவமாடுகின்றது என்கிறார் வங்கித்துறையில் இருக்கக் கூடிய நண்பர்.

வறட்சிக்கும் வங்கிக்கும் என்னதொடர்பு என்கிறீர்களா? இந்தப் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் வறட்சியும் மக்களைப் போட்டுத் தாக்க அவர்கள் என்ன செய்வார்கள்? எங்குபோவார்கள்? இருக்கும் சொத்துக்களைத் தூக்கிக் கொண்டு அடமானம் வைக்க வங்கிகளுக்கு, நிதி நிறுவனங்களுக்குத்தான் போவார்கள். அதுதான் வறட்சிக்கும் வங்கிகளுக்குமான தொடர்பு.

வறட்சி தீவிரமடைந்திருக்கும் இந்தச் சில மாதங்களில் மட்டும் வங்கிகள், நிதி நிறுவனங்களில் சொத்துக்கள், தங்கநகைகளை அடமானம் வைத்துப் பெறப்பட்டுள்ள தோகை 10 ஆயிரம் கோடி ரூபாய்களுக்கும் மேல் என்கிறார் என் வங்கித்துறை நண்பர்.

குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 15 மாவட்டங்களில் மட்டுமே இந்த நிலமை என்பதும் அவரது தகவல். இந்தப் 15 மாவட்டங்களிலும் சுமார் 2 லட்சம் மக்களுக்குக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வறட்சியால் 60ஆயிரம் ஏக்கர் அளவிற்குப் பயிர் அழிவு ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன.

விவசாயம் படுத்தால் விசாயிகளுக்கு மட்டுமல்ல, அதை நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கும் திண்டாட்டம்தான். வறட்சி நிலத்தில் மட்டுமல்ல கடலிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பல இடங்களிலும் ஏரிக் கடல்களில் மீன்பிடித்தொழில் செய்துவந்த மீனவர்களுக்கு இப்போது தொழில் இல்லை.

இப்படி வறட்சி எல்லா இடங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் அதைச் சமாளிக்க மக்கள் கைகளில் கால்களில் இருபவற்றை அடகு வைப்பதுதானே வழக்கம். அதுதான் வங்கிகள் நிதிநிறுவனங்களில் நகைகள் அடகு பிடிப்பதற்காக வந்து குவிகின்றன. நிலமை சீராகும் மீண்டும் பணம் சம்பாதிக்க முடியும் என்று நினைப்புடன்தான் பெரும்பாலானவர்கள் அடகு பிடிக்க வருகிறார்கள். ஆனால் அவர்களால் அது முடியாத நிலையில் நகைகள் மாண்டுபோவதுதான் பெரும்பாலும் நடக்கிறது என்கிறார் எனது வங்கித்துறை நண்பர்.

பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளிவிவரவியல் துறைப் பேராசிரியர் வசந்த அத்துக்கோறளவின் கணிப்புப்படி கடந்த ஆண்டில் மட்டும் இலங்கை மக்கள் வங்கிகள் மற்றும் அடகுக் கடைகளில் தமது தங்க நகைகளை வைத்துப் பெற்றுக்கொண்ட தொகை 68 ஆயிரத்து 729 கோடி ரூபாய். பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்புவதற்காக மக்கள் பெற்ற கடன் இது.

எமது மக்கள் தங்கத்தில் முதலிடுவது பொதுவாக இத்தகைய நெருக்கடி ஏற்படும்போது அது உதவும் என்பதற்காகத்தான். ஆனால், பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்று பொருளாதார நெருக்கடியால் பேரிடிவாங்கியிருப்பவர்களை வறட்சியும் வாட்டிவதைத்தால் அவர்கள் என்னதான் செய்வது?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை கிடப்பிலேயே உள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு தமது தாயகம் என்று வரையறுத்துக் கூறுகிறார்கள். அவர்களுக்கு நான் விசேட செய்தியொன்றை குறிப்பிட இருக்கின்றேன். நீங்கள் வடக்கு கிழக்கு பகுதியை மட்டும் வரையறுத்து உங்களுடைய பூர்வீகப் பகுதி என்று கூறாதீர்கள்.

உங்களுக்கு ஒட்டுமொத்த இலங்கையுமே பூர்வீக பகுதிதான். அதேபோல எமக்கும் நாக விகாரை முக்கியமான வழிபாட்டு தலம்தான். இந்தவிடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறில்லாத விட்டால் நாம் ஏகாதிபத்தியத்தினுடைய பிடிக்குள் சிக்கி தவிர்க்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

அவ்வாறான நிலைமை வெகுவிரைவில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. குறிப்பாக அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் ஏகாதிபத்தியத்துக்குள் நாம் சிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

அந்நிலை தோன்றும் பொழுது நாம் இரண்டாவது சுதந்திரத்தை பெறுவதற்காக மீண்டும் இணைந்து போராட வேண்டிய நிலைமை ஏற்படும். குறிப்பாக 1948 முன்னர் எவ்வாறு சுதந்திரத்தைபெற்றுக்கொள்ள இணைந்து போராடினோமோ அதேபோன்று, அதன் இரண்டாவது அத்தியாயத்தை மீண்டும் தொடக்க வேண்டியேற்படும் - என்றார்.

## 2024 வரவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான வசதிகளையும் வழங்கவேண்டியுள்ளது.

அந்த வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசியமான விடயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெரும்பாலும் இழப்பீட்டு நிதியை மையப்படுத்தியதாகவே அமையவுள்ளது - என்றார்.

## தற்போதைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, 300 கிகாவாட் மணிநேரம் மின்சாரத்தையே உற்பத்தி செய்ய முடியும். இதற்கிடையில், அனல் மின் நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி 65 சதவீத அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், சூரிய மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் சுமார் 11 சதவீத மின்சார உற்பத்தி திறன் தேசிய அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே அனல் மின் உற்பத்தி காரணமாக மின்வெட்டு இன்றி மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்கமுடியும் - என்றுள்ளது.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளப்படுத்தப்படுகின்ற பொழுது, ஏனைய சர்வதேச நாடுகள் எம்முடைய கடன்மறுசீரமைப்பு கடிதங்களை ஏற்றுக் கொள்ளாது - என்றார்.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சாரப் பரிமாற்றக் கட்டமைப்பை மேற்கொள்ளவுள்ளனர். இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்சாரத்தை பரிமாற்றம் செய்ய முடியும்.

அதேபோன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எண்ணெய்க் குழாய் கட்டமைப்பை உருவாக்கப் போகிறார்கள். தற்பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்கு இடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்களின்போது இந்திய ரூபாயே பயன்படுத்தப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் தரை வழியிலும் கடல் வழியிலும் ஆகாய வழியிலும் தொடர்புகளை வலுவாக ஏற்படுத்த முயற்சி செய்கின்றார்கள். மட்டக்களப்புக்கும் சென்னைக்கும் இடையில் புதிதாக விமான சேவை தொடங்கப்படவுள்ளது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கின்ற பொழுது, அன்று போன்று தற்போதும் எமது நாட்டின் இறைமையை மீட்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியின் முடிவில் நாம் எமது இறைமையை முழுமையாக இழக்க நேரிடும். நாம் நமது இறைமையை இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளிடம் இழந்துவிட்டு மீண்டும் வரலாற்று காலத்தில் இருந்தது போன்று காலனித்துவத்துக்குள் இருக்கவே நேரிடும். ஆகவே அவ்விதமான அதிகாரபிரயோகத்திற்கு இடமளிக்கக்கூடாது - என்றார்.

## உள்நாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் இந்த நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்கத்தினரின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றிப் பயன்படுத்த ஆட்சியாளர்கள் முயல்கின்றனர்.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஊழியர் நிதிகளின் மீது சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினது சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித் தொகை (50%) எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள ஆளும்தரப்பு முற்படுகின்றது. இதன் மூலம் ஊழியர் நிதிகளின் அங்கத்தவர்களுக்கு நிதி ரீதியான உடனடிப் பாதிப்பும் நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் நாளை நாடுமுழுவதும் அடையாளப் போராட்டங்கள் பல இடங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் இங்குள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் மதிய உணவு இடைவேளையின்போது (12 - 01 மணி) ஓர் அடையாளப் போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அனைவரது ஆதரவினையும் வேண்டி நிற்பதோடு, மேற்படி ஊழியர் நிதிகளையும் ஓய்வூதிய நிதிகளையும் ஆளும் தரப்பு கையாள்வதன் மூலம் பாதிக்கப்படவிருக்கும் அரச, அரச மருவிய மற்றும் தனியார் துறை சார்ந்த அனைத்து தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், மக்களையும் இவ் அடையாளப் போராட்டத்தில் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடமாகாண சமூகசேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், ஷ்ரீ லங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற் சங்கம் ஆகியன இந்த அழைப்பை விடுத்துள்ளன.

## பிளவுபடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாரந்தெனிய மக்கள் சந்திப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு என்ற வகையில் நாம் அனைத்து வகையிலும் பாதிக்கப்படுகின்றோம். அரசியல், சுகாதாரம், கல்வி, விவசாயம், தொழில்வாய்ப்பு, புவிசார் அரசியல் என்று அனைத்து விடயங்களிலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளோம்.

இவ்வாறு நாம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எமது நாடு பலம் வாய்ந்தவர்களின் விளையாட்டு மைதானமாக மாறி வருகிறது. அத்துடன் எமது நாடு ஏலத்தில் விடப்படும் பூமியாக மாறி இருக்கிறது.

பலமான சக்திகள் எமது நாட்டில் இருந்து தமது பங்குகளை பறிப்பதற்காக காத்துக்கொண்டிருக்கின்றன. மக்கள் ஆணை இல்லாத ஆட்சியாளர்கள் பலவீனமான நிலையில் இருக்கின்றார்கள். இதனால்தான் நாடு ஆபத்தான நிலையில் இருக்கின்றது. நாடு பிளவுபடும் நிலையில் இருக்கின்றது. மக்களின் ஆணையும் ஆட்சியாளர்களுக்கு இல்லை மக்களின் ஆசிர்வாதமும் ஆட்சியாளர்களுக்கு இல்லை. இதனால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆட்சியாளர்கள் தமது சொந்த நலன்களுக்காக நாட்டைத் துண்டாட முனைகிறார்கள். நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு நினைக்கிறார்கள். இந்த நிலைமை தொடர்வதற்கு இடம் அளிக்க முடியாது - என்றார்.

# பிரிக்ஸில் சேர நடவடிக்கை எடுங்கள் ரணிலிடம் கம்பன்பில வலியுறுத்து

'பிரிக்ஸ்' அமைப்பில் இலங்கை உறுப் புரிமை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் போக்குகள் வேகமாக மாறிவருகிறது. உலக வல்லரசுகள் ஆசியாவை நோக்கி நகர்கின்றன. இலங்கை தனது அயலுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்து அதற்கேற்ப மறுசீரமைக்க வேண்டிய நேரம் இதுவாகும். தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற பிரிக்ஸ் அமைப்பின் சமீபத்திய உச்சிமாநாட்டில், சவுதி அரேபியா, ஈரான், எத்தியோப்பியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய ஆறு நாடுகள் முழு அங்கத்துவத்தைப் பெற்றுள்ளன. இன்னும் பல நாடுகளும் இதில் சேர முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

பிரிக்ஸ் அமைப்பிலுள்ள நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 27 சதவீதத்தைக் கொண்டுள்ளன. பிரிக்ஸின் முன்முயற்சியாக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக்கு மாற்றாக 50 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆரம்ப மூலதனத்துடன் 'புதிய வளர்ச்சி வங்கி' என்ற கடன் வழங்கும் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயமாக அமெரிக்க டொலர், அமெரிக்கா உள்ளிட்ட ஜி7 நாடுகளின் ஆதரவுடன் உலக சந்தையில் ஆதிக்கம் செலுத்துகிறது.

அமெரிக்க டொலரைப் பொருட்படுத்தாமல் சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான பொதுவான அணுகுமுறைய பிரிக்ஸ் அமைப்பு இப்போது ஆராய்ந்துவருகிறது.

ஆகவே, இலங்கையும் இந்த அமைப்பில் இணைவதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்றுள்ளது.

# கஜேந்திரகுமார் எம்.பி. வீட்டின் முன் கொழும்பில் நேற்றும் போராட்டம்

## இராணுவத்தினரும் இறக்கப்பட்டு அவருக்கு பாதுகாப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டம் இடம்பெற்றது. இதனையொட்டி அவரது வீட்டுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

அவரது வீட்டுக்கு முன்பாக வெள்ளிக்கிழமையும் பிக்கு உள்ளிட்ட ஐந்து பேர் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். நேற்றைய தினம் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையில் போராட்டம் இடம்பெற்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குடும்பம் கொழும்பும் அனுபவிக்கும் உரிமையை சிங்களவர்கள் வடக்கில் அனுபவிக்க அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்னால் நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான்கு தலைமுறையாக பொன்னம்பலம் குடும்பத்தினர் கொழும்பில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு தென்னிலங்கையில் உள்ள எந்தவொரு பொதுமகனாலும் எவ்விதமான தொந்தரவுகளும் நெருக்கடிகளும் இதுவரையில் வழங்கப்படவில்லை. ஆனால் பொன்னம்பலம் பரம்பரையின் மூன்றாவது நபராக இருக்கும் கஜேந்திரகுமார் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ள திஸ்ஸ விகாரையில் வழிபாடுகள் நடைபெறுகின்றபொழுது அதனைக் குழப்பும் விதமாகப் போராட்டங்களை முன்னெடுக்கிறார்.

அதேபோல முல்லைத்தீவு குருந்துவிகாரையில் பிரித் வழிபாடுகள் நடைபெறுகின்ற பொழுது அங்கும் குழப்பங்களை ஏற்படுத்த போராட்டங்களை நடத்துகிறார். எனவே, அவரிடத்தில் நாம் முக்கியமான கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கின்றோம். நீங்கள் தென்னிலங்கையில் அனுபவிக்கின்ற சுதந்திரத்தை எமக்கு வடக்கில் அனுபவிப்பதற்கு இடமளியுங்கள் என்பதே அந்தக் கோரிக்கை இதனை அவர் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.






# தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் பயிற்சிப்பட்டறை!



"அம்பாறை மாவட்ட நூலகர்களின் வினைத்திறனை மேம்படுத்துமுகமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள் பயிற்சிப்பட்டறை"

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள் பயிற்சிப்பட்டறை கடந்த 19.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் "Empowering Libraries with the power of Research" எனும் தலைப்பில் Y.M. Trust அனுசரனையுடன் இடம்பெற்றது.

இந் நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத்தீன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும்,; சிறப்பு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி ற.த.ஜேயராஜ், வளவாளர்களாக தென்னிந்தியாவைச் சேர்ந்த பாரதிதாசன், பல்கலைக்கழக நூலகவிஞ்ஞானபிரிவின்பொறுப்பாளர் கலாநிதி ஆர். பாலசுப்ரமணி மற்றும் பேராதனைப்பல்கலைக்கழகநூலகர் ஆர். மஹேஸ்வரன் ஆகியேரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந் நிகழ்வினை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எம்.சி.எம். அஸ்வர் தொகுத்துவழங்னார், மற்றும்ஏனைய சிரேஷ்ட உதவி நூலகர்களான கலாநிதி எம்.எம்.மஷ்ரூபா, ஏ.எம். நஹ்பீஸ், எஸ்.எல்.எம்.சஜீர், உதவி வலையமைப்பு முகாமையாளர்; எம்.ஜே.எ.சாஜித்,; நூலக உத்தியோகஸ்த்தர்கள் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வலையபணிமனைகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பொது நூலகர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை நூலகர்கள், கல்வியற் கல்லூரி நூலகர்கள், தொழிநுட்ப கல்லூரி நூலகர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக வரவேற்புரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுதீன் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து கூஃனி. வீஷற்விமி யின் நன்கொடைப் புத்தகப் பொதியினை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களினால் SERLIN அமைபிப்பின் நூலகர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இங்குதொடர்ந்து உரை நிகழ்த்திய பல்கலைக்கழக உபவேந்தர் சமகாலத்தில் நூலகங்களுக்கிடையேயான தகவல்வலையமைப்புஎன்றவிடயம் மிகவும் அவசியமானது என்றும் இதன் மூலம் நூலகங்கள் எல்லாம் டிஜிடல் மயமாக்கலை நோக்கிப்; பயணித்துக் கொண்டிருகப்பதனால் நாம் அனைவரும் அதனைப்பின் தொடரவேண்டும்எனக் குறிப்பிட்டார்.

மேலும் வளவாளரான தென்னிந்தியாவைச் சேர்ந்த கலாநிதி ஆர். பாலசுப்ரமணி "Empowering Libraries through Research" எனும் தலைப்பில் explain paper, elicit, DOAJ, teacher tube and library thing இன்னும் பல தலைப்புகளைக்கொண்டு online மூலம் செயற்படுத்தி மிகவும் தெளிவான விழக்கங்களை வழங்கினார். இதனைத் தொடர்ந்து வளவாளரான பேராதனைப்பல்கலைக்கழக நூலகர் ஆர். மஹேஸ்வரன் அவர்கள் "Needs for Empowering our Libraries" எனும் தலைப்பில்நூலகஉத்தியோகஸ்தர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினைப்பெற்றுக்கொடுக்குமுகமாக கிழக்கு பிராந்தியத்தில் இருக்கின்ற அனைத்து நூலகர்களும் ஒரு union கீழ்செயற்படவேண்டும்அப்போதுதான் உங்களின்கல்வித்தகைமைகளுக்கு அமைவாக உங்களின் பதவி உயர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை விளங்கப்படுத்தினார்

இதன்படி நூலக மற்றும் தகவல் வலையமைப்புத் திட்டத்தின் இணைப்பாளர் கலாநிதி எம்.எம்.மஷ்ரூபா இணைய வலையமைப்பினூடாக தென்கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து வகையான நூலகர்களையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதன் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார். இதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள நூலகர்களை வலுவூட்டுவதுடன் சிறந்த சேவையினை வாசகர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். SERLIN பணிப்பாளர் நூலகர் எம். எம். றிபாயுத்தீன் தனது கருத்தைதெரிவிற்கும்போது. உத்தேச நூலகத் தகவல் வலையமைப்பினூடாக இப்பிரதேச நூலகங்களின் சேவைவழங்கள்திரனைமேம்படுத்த வேண்டும். தற்காலத்தில் இவ் அமைப்பு மிகவும் முக்கியமானது என்றும் தற்காலத்தில் பல சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றபடியால் நாம் அனைவரும் ஒன்றினைய வேண்டும் எனும் நோக்கில் இப்பணியை முன்னோக்கிச்செல்ல வேண்டும் என்று SERLIN இன் முக்கித்துவத்தையும் விபரித்தார். நூலகங்களின் நூற்சேற்கைகளை வலப்படுத்துதல், உறுப்பினர்களிடையே வழங்களைப்பகிர்தல், நூலக அமைப்பு மற்றும் சேவைகளைமேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல், நூலகங்களின் திறனை மேம்படுத்துவதற்கானதொழில்சார்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஆராய்ச்சி நடவடிக்கைகளில் பணியாளர்கள் மற்றும் தொழில்சார் ஊழியர்களை ஊக்கப்படுத்துதல், வாசிப்பை ஊக்குவித்தல் என்ற பல்வேறு நோக்கங்களைக் கொண்டுதான் இவ் SERLIN அமைப்பினை உருவாக்கினோம்என்றுதெரிவித்தார்.





நிகழ்வின் முடிவில் SERLIN அமைப்பினருக்கு சான்றிதழ்கள் வழங்கி குறித்த நூலக மற்றும் தகவல் வலயமைப்புச் செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கும் வலயமைப்பின் குறிக்கோள், எதிர்பார்க்கப்படும் அடைவுகள், இலக்குக் குழுக்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் குறித்த திட்டத்தின் நிலைபேறான தன்மை போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன. (05)



## சருகுப் புலிக் குட்டி விபத்தில் சிக்கிச் சாவு

அம்பாறை மாவட்டம் மாவடிப்பள்ளி - காரைதீவுப் பகுதியை இணைக்கும் பிரதான வீதியில் சருகுப்புலி இனத்தைச் சேர்ந்ததென நம்பப்படும் குட்டியொன்று வியாழக்கிழமை விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளது.

மக்கள்வாழும்பகுதியில் வியாழக்கிழமை இரவு குறித்த சருகுப்புலி உள் நுழைந்து கிராமவாசிகளின் வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடி வந்துள்ள நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

## வீதியில் மயங்கி விழுந்து யாழ்ப்பாணத்தவர் சாவு

யாழில் நபர் ஒருவர் வீதியில் மயங்கி விழுந்து வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். தோட்ட வேலை முடித்துக்கொண்டு வீடு திரும்பியபோதே குறித்தநபர் இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழுந்தவர் யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியை சேர்ந்த 37 வயதான இராசரத்தினம் நாகேந்திரன் எனத் தெரிய வந்துள்ளது.

இதே வேளை அவரது சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ள நிலையில், உடற்கூற்றுபரிசோதனைக்கு பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

## போதைப்பொருள் பாவனை வடக்கில் அதிகரித்துள்ளது

### ஈ.பி.டி.பி. பேச்சாளர் வருத்தம்




வடமாகாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துவருவது வருத்தமளிப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடகஅமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக ஒரு சில வணிகர்கள் சார்ந்தோர் மத்தியில் போதைப் பொருள் கைப்பற்றப்படுவதும் குறித்த பாவனையால் இளைஞர்கள் உயிரிழப்பதும், வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதும் அதிகரித்து வருகின்றன.

இது எமது இளம் சமுதாயத்தைவெகுவாகப்பாதித்து வருகின்றது. இந்தவிடயத்தில் பெற்றோர்களும் சட்டம் ஒழுங்கைநிலைநிறுத்துகின்ற தரப்பினரும் உரிய அக்கறை செலுத்த வேண்டும்.

சமூகவிரேதசெயல்களில் ஈடுபடுகின்ற நபர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு நாம் வழங்கும் தகவல்கள் சில நிமிடங்களிலேயே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரிய வருவதோடு அவர்கள் எம்மைத்தொடர்புகொண்டுஅச்சுறுத்தல் விடுக்கும் நிலையும் தற்போது இடம் பெற்று வருகின்றது.

இது உண்மையில் சமூகவிரோத செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு ஏதுவானதான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுப்பதாக அமைந்துள்ளது. இதேவேளை, தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கிச் செல்வதற்கு 13 ஆவது திருத்தச்சட்டம் வழிவகுக்கும் எனஅமெரிக்கத்தூதுவர்ஜூலி சங் தெரிவித்துள்ள கருத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வரவேற்கிறது.

13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகக் கொண்டு, அதிலிருந்து நாம் முன்னேறி மேலும், அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இந்நிலையில், எமது மக்களுக்கான அரசியல் நிலைப்பாட்டை விளங்கிக் கொண்ட உலக வல்லரசான அமெரிக்கா இன்று சில நாடாளுமன்றத்தைபிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ்க் கட்சிகளை அழைத்து 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது புத்திசாலித்தனமானது என்ற கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த விடயம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீர்க்கதரிசனமான தூர நோக்கு கொண்ட அரசியல் தீர்வு முயற்சிக்கான ஓர் அங்கீகாரமாகவேநாம்பார்க்கின்றோம்.

ஏற்கனவே சர்வதேசம் எமது பிரச்சினையில் தலையிடாது எமது பிரச்சினைகளுக்கான தீர்வை நாமே தேடிக்கொள்ளவேண்டும்என எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியபோது சில அரசியல் கட்சிகளும் ஆய்வாளர்களும்அதனைபொருட்படுத்தாது ஒரு மலினமான கூற்றாக விமர்சனம் செய்திருந்தனர்.

ஆனால், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சில அரசியல் கட்சிகளுடனான சந்திப்பில் அமெரிக்க தூதுவர் சர்வதேசம்ஒருவரையறைக்கு மேல் இலங்கையின் உள் விவகாரங்களில்தலையிடாது என அழுத்தம் திருத்தமாக சொல்லியிருந்தார். - எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## ஜனாதிபதியிடம் எமது கோரிக்கைகள் செவிடன்காதில் ஊதிய சங்குபோல்தான்

### சாணக்கியன் எம்.பி. சாட்டை



ஜனாதிபதியிடம்நாம் கோரும் மக்களுக்கான கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே உள்ளன.

- இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

அவர் மேலும் தெரிவித் தவைவருமாறு -

இந்த வாரம் நடந்த நாடாளுமன்ற கேள்வி பதிலின் போது என்னால் இரண்டு கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அதில்பலகாலமாக கோரிக்கை வைத்த இரண்டாவது கேள்விக்கான தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது. முதல் கேள்வி பிரதமரிடம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களில்எமக்கும்நடக்கும்அநியாயங்கள்மற்றும் அட்டூழியங்கள் தொடர்பில் கோரிக்கை விடுத்தும் அவரால் இன்னும் இவற்றுக்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டியதோடு. இதற்கான நடவடிக்கையை துரிதப் படுத்தவேண்டும்எனவும் வலியுறுத்தப்பட்டது.

இரண்டாவது விடயம் பந்துல குணவர்த்தன - வர்த்தக அமைச்சருக்கானது. மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி பிரதேசசெயலாளர் பிரிவில் களுதாவளை பிரதேசத்தில் கடந்த நல்லாட்சியின் போது வர்த்தக மையம் ஒன்று அமைக்கப்படாது. இதுவரை காலமும் இந்த வர்த்தக மையத்துக்காக எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படாமல் இருந்தது. ஆனால் அதனை செயற்படுத்துவதற்கான உறுதியை வழங்கி இருந்தார்.(05)

## கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வுப் பேரணி



கிளிநொச்சியில்போதைப் பொருள் பாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகப் பேரணி ஒன்று வெள்ளிக்கிழமைமுன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள போதைப் பொருள்பாவணைக்குஎதிராக வேல்விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம், கண்டாவளை பிரதேச செயலகம், கரைச்சி பிரதேச ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள்இணைந்துஇந்த விழிப்புணர்வுப்பேரணியை முன்னெடுத்திருந்தனர்.(05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வறட்சியை எதிர்கொள்ளல்!

**கடும் வறட்சியால் நாடு முழுவதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 25 மாவட்டங்களில் 19 மாவட்டங்கள் வறட்சிப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது. இதனால் கிட்டத்தட்ட 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.**

**யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல, புத்தளம், பதுள்ளை, மொனராகல, கம்பஹா, அம்பாந்தோட்டை, மாத்தளை, கண்டி, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்கள் வறட்சிப் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. இங்குள்ள 84 ஆயிரத்து 646 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 91 ஆயிரத்து 720 பேர் நேற்று வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

**இதில் வடக்கு மாகாணம்தான் மிக உச்சமாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு 23 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்து 607 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மையம் அறிவித்துள்ளது. இவர்களில் 70 ஆயிரத்து 408 பேர் யாழ்ப்பாணத்தவர்கள். அதி உச்ச வெப்பநிலையும் வடக்கு மாகாணத்திலேயே பதிவாகி உள்ளது.**

**இந்த வறட்சியால் நாட்டில் உள்ள 6 ஆயிரம் ஆறுகள் நீர் நிலைகளில்தண்ணீர்ஆபத்தானஅளவிற்குக்குறைந்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் அதிகார சபை தெரிவிக்கின்றது. இதனால் விவசாயம் பல இடங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் ஏற்பட்ட நட்டத்திற்கு இழப்பீடாக ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் தரப்படவேண்டும் என்று அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புக்கள் கோருகின்றன. ஆனால் இழப்பீடு வழங்கக்கூடிய அளவிற்கு விவசாய அமைச்சிடம் பணம் இல்லை என்று கைவிரிக்கின்றார் அமைச்சர்.**

**இன்னும் மூன்று முதல் நான்கு வாரங்களுக்கு இந்த வறட்சிக் காலநிலை நீடிக்கும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. ஆவணி முதல் புரட்டாதி வரையான காலப் பகுதியில் வடக்கு, வடமத்தி, கிழக்கு மாகாணங்களுக்கு தென்மேல் பருவக்காற்று மூலம் கிடைக்கக்கூடிய மழைவீழ்ச்சி இந்தத் தடவை சராசரிக்கும் மிகக் கீழேயே இருக்கும் என்றும் வானிலை முன்னறிவிப்புக்கள் தெரிவிக்கின்றன.**

**இந்த வறட்சி நிலையை அடுத்து வடக்கில் உள்ள குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள குளங்கள் குட்டைகளைத் தூர்வாரவேண்டும், அவற்றை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கவேண்டும், நீர் நிலைகளை ஆழமாக்கவேண்டும் என்றெல்லாம் யோசனைகள் அரச அலுவலகக் கூட்டங்களில் முன்வைக்கப்படுகின்றன. இவையெல்லாம் வறட்சியைக் கண்டதும்செய்யப்படவேண்டியபணிகளல்ல. ஒவ்வொருஆண்டும் கிரமமாக முன்னெடுக்கப்படவேண்டிய பணிகள். வறட்சியைக் கண்டதும் தூர் வாருவதன் மூலமும் ஆழமாக்குவதன் மூலமும் வறட்சியைப் போக்கிவிட முடியாது.**

**அதற்கும் மேலாக தற்போதைய வறட்சி, புவி வெப்பமாவதன் விளைவாக ஏற்படுகின்ற விளைவு. அதனை இத்தகைய சிறு குளம் குட்டைகளைச் சீரமைப்பதன் மூலம் எதிர்கொண்டுவிட முடியாது. புவி வெப்பமயமாதலின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், அதனைத் தடுக்க நாம் முன்னெடுக்கக்கூடிய கொள்கைசார் மற்றும் செயல்முறைசார் நடவடிக்களைத் திட்டமிடுவதன் மூலமும் மட்டுமே ஒரு சிறு அளவிலாவது பங்களிக்க முடியும்.**

**போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு கிழக்கில் குளிரூட்டிகளின்பயன்பாடுமிகவேகமாகஅதிகரித்திருக்கின்றது, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனின் அதீத பயன்பாட்டால் தண்ணீர் நிலத்தடிக்குச் செல்வதைத் தடுத்து வருகின்றோம், வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்திருக்கிறது இதன் மூலம் வளிமண்டலத்தில் கரியமிலவாயுவின் வெளியேற்றத்தை அதிகரித்திருக்கின்றோம். இவையெல்லாம் புவி சூடாவதற்கான காரணங்கள். அவற்றைக் குறைப்பதற்கும் நிறுத்துவதற்குமான கொள்கை முடிவுகளையும் திட்டங்களையும் செயற்படுத்தாமல் புவி வெப்பமயமாதலைக் குறைக்க எம்மால் துளியளவுகூடப் பங்களிக்க முடியாது.**

**அத்தகைய நிலையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இப்படியான கடும் வறட்சியையும் பின்னர் அதீத வெள்ளப் பெருக்கையும் எதிர்கொள்வதைத் தவிர்க்கவும் முடியாது. எனவே நீர்நிலைகளைத் துப்புரவு செய்வது போன்ற வருடாந்தப் பணிகளை கிரமமாகவும் புவிவெப்பமாதலைத் தடுப்பதற்கான பெருந் திட்டங்களை முன்னேற்பாடாகவும் செயற்படுத்தத் துணிந்தாலன்றி, எம்மால் இந்த இடரை எதிர்கொள்ள முடியாது என்பதைப் புரிந்து நடப்போம்!**

# ஆயுள்வேத சட்டத் திருத்தத்தினால் சுதேச வைத்தியத் துறைக்குப் பாதிப்பு

ஆயுள்வேதமருத்துவம்தொடர்பான சட்டத்தைத் திருத்த ஆளும் தரப்பு எடுத்துள்ள முயற்சிகள் சுதேச வைத்தியத் துறைக்கே பெரும் பாதிப்பாக அமையும் என்று பாரம்பரிய மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆயுள்வேத சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அது உள்ளூர் மருந்து உற்பத்தியைப் பெருமளவில் பாதிக்கும். மருந்துகளை வினைத்திறனாக உற்பத்தி செய்யவோ, தயாரிக்கவோ முடியாது போகலாம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

28 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுள்வேத சட்டத்தை அவசரமாக அவசரமாகத் திருத்துவதற்கு ஆளும் தரப்பு முயற்சிப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பாரம்பரியவைத்தியநிபுணர்களான மருத்துவர் கமல் பந்துல வீரப்பெரும மற்றும் மருத்துவர் வொஷிங்டன் கல்ஹனகே நாணயக்கார ஆகியோர், ஆயுள்வேத சட்டத்திற்கு அமைவாக இல்லாத உத்தேச திருத்தங்களுக்கு எதிராக சட்ட உதவி கோரி உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். உயர் நீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை ஒகஸ்ட் 10 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அதன் அடிப்படையில் திருத்தப்பட்ட சட்டவரைவு நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

சணல் சாகுபடியை விரிவுபடுத்துவதற்கு வசதியாக ஆயுள்வேத சட்டத்தில் திருத்தம் செய்வதாக ஆளும் தரப்புக் கூறுகின்றது. அதன்படிதனியார் முதலீட்டாளர்களை இணைத்து சணல் சாகுபடி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த முயற்சியில் ஈடுபட இந்திய முதலீட்டாளர் ஒருவர் ஏற்கனவே விருப்பம்தெரிவித்துள்ளார். ஆயுள்வேதச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் சணல் சாகுபடி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இந்தச் சட்டத்தில் உள்ள சில உட்பிரிவுகள், உள்ளூர்மருந்துகளில்பயன்படுத்தப்படும் அனைத்து மூலிகைகளையும் வெளிநாட்டு நிறுவனங்கள் பயிரிடுவதற்கு ஆவனசெய்கிறது.

இந்தச்சட்டம்நிறைவேற்றப்பட்டால், உள்ளூர் ஆயுள்வேத மருத்துவர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய உள்ளூர் மருத்துவ மூலிகைகளை பயிரிட முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றஅச்சம்வெளிப்படுத்தப்படுகின்றது. சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மூலிகைகளை உற்பத்தி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து அவை சொல்லும் விலைக்கு அவற்றை வாங்குவதைத்த விர வேறு வழியேதும் இருக்காது என்பதே அவர்களின் அச்சம்.

புதியஆயுள்வேதசட்டத்தில்முன்மொழியப்பட்டதிருத்தங்களின்படி, மருத்துவ நோக்கங்களுக்காகப்பயன்படுத்தப்படும் அனைத்து மருத்துவ தாவரங்களும் இனி அரசு அனுமதி பெற்றவர்களால் மட்டுமே வளர்க்கப்பட முடியும். புதிய திருத்தங்கள், ''மூலிகைத் தோட்டங்கள்" என்றசொல்லைக் குறிப்பிடுகின்றன. மேலும், ஆணையாளர் நாயகத்தைத் தலைவராகக் கொண்ட ஆயுள்வேதத் திணைக்களத்தின் மேற்பார்வையில், ஒவ்வொரு மூலிகைத் தோட்டமும் ஒழுங்குமுறைக்கு உட்பட்டதாக இருக்கும் என்று சட்டம் கூறுகிறது. இந்த விதிமுறைகளின் கீழ், உள்ளூர் மருந்துகள் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மருத்துவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்படுகின்றன. பாரம்பரியமாக -பரம்பரை பரம்பரையாக - மருத்துவம் பார்த்து வரும் வைத்திய நிபுணர் மருத்துவர் வீரப்பெரும போன்றவர்கள்மூலிகைகளைவினைத்திறனாக வளர்க்கவோ அல்லது உள்ளூர் மருந்துகளை தம்முடன் வைத்திருக்கவோ முடியாத நிலை இந்தச்சட்டத் திருத்தங்களால் ஏற்படும்.

முந்தைய ஆயுள்வேத சட்டத்தில் சுதேச மருத்துவத்தை விளக்கப் பயன்படுத்தப்பட்ட 'சிகிட்சா' என்றசொல் புதியதிருத்தங்களில்தவிர்க்கப்பட்டுள்ளது. "சிகிட்சாவில்ஆயுர்வேதபயிற்சியாளரின் ஈடுபாடு சட்டரீதியாக ஒரு குற்றமாககூட விளக்கப்படலாம். பாரம்பரிய மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில், 'சிகிட்சா' என்பதுஉடல்நலம்குன்றியநபர்களுக்கு 'சேத் சாந்தி' அல்லது 'தோவில்' போன்ற மருத்துவ சிகிச்சைகள் மற்றும் சடங்குகளைப் பயன்படுத்தும் போது மந்திரங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. பாரம்பரிய மருத்துவ முறைகளில் 'சிகிட்சா' கணிசமான பங்கைவகிக்கிறது," என்றார் மருத்துவர் வீரப்பெரும. புதியதிருத்தங்களில்இருந்து பாரம்பரிய மருத்துவத்தின் அடிப்படைக் கூறுகளான 'சிகிட்சா' விலக்கப்படுவது பெரும் கவலைக்குரியதாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கூடுதலாக, புதிய திருத்தங்கள் ஆயுள்வேதவிநியோகநிபுணர்கள்என்கிற புதியவர்களை அறிமுகப்படுத்தியுள்ளன, அவர்களுக்கு ''மருந்தாளர்கள்'' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த வல்லுநர்கள் ஆயுர்வேதக் கொள்கைகளின் அடிப்படையில் மருந்துகளை விநியோகிப்பதற்கும் கலவைகளைத் தயாரிப்பதற்கும்பொறுப்பானவர்கள். புதிய சட்டம்அவர்களுக்கு(மருந்தாளர்களுக்கு) மருந்தகங்களை நிர்வகிப்பதற்கும் மருந்துகளைத் தயாரிப்பதற்கும் அதிகாரத்தை வழங்கும்.

"இருப்பினும், உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கு பதிலளிக்கும் வகையில், புதிய திருத்தத்தில் இருந்து 'மருந்தாளர்' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தம் ஆயுள்வேத மருத்துவர்கள் மற்றும் ஆயுர்வேதத்தில் பட்டதாரியாகுபவர்களுக்கு கணிசமான பாதிப்பைஏற்படுத்தும். இதன்விளைவாக, இதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று மருத்துவர் நாணயக்கார தெரிவித்தார்.

இந்தச் சட்டம் பாரம்பரிய மருத்துவர்கள் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குகிறது. இது ஒரு முறையானகுழுவால்மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், பாரம்பரிய சுதேச மருத்துவத்தை ஆயுள்வேத மருத்துவத்துடன் கலப்பது கவலைக்குரியது. பிந்தையது இந்தியாவில்இருந்துஉருவானதுமற்றும் உள்நாட்டு நடைமுறைகளிலிருந்து வேறுபட்டது. முந்தையது இலங்கைக்கே உரிய தனித்துவமானது. கலாநிதி நாணயக்காரவின் கூற்றுப்படி, இந்த விடயத்தை முழுமையாக ஆராய வேண்டிய அவசரத் தேவை உள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தத்தில் 'மசாஜ் அதிகாரி' என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட சொற்றொடர் உள்நாட்டு மருத்துவத்தின் சூழலில் காணப்படவில்லை. இதுவிபச்சாரத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளைச் சட்டப்பூர்வமாக்கும் முயற்சி நடக்கிறதா என்ற கவலையையும் ஏற்படுத்துகிறது. ஆயுள்வேத நடைமுறைகளைப் பின்பற்றி மசாஜ் செய்யும்போது, அது ஆயுர்வேதத்தின் கொள்கைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால்பல்வேறு பிரச்சினைகள் எழலாம் என்கிறார் பாரம்பரிய வைத்திய நிபுணர் நாணயக்கார.

"பயிற்சி பெற்ற பராமரிப்பாளர் ஒரு மருத்துவ உதவியாளராக நியமிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் புதிய திருத்தங்கள் ஊடாக விதிக்கப்பட்டுள்ளது. இதுபாரம்பரியமருத்துவத்தின்மரபுகளுக்குச் சவாலானது. தற்போதுள்ள நடைமுறைப்படிஅந்தப்பொறுப்புபெரும்பாலும் ஆயுள்வேத மருத்துவர்களின் சந்ததியினர் மற்றும் உறவினர்களால் கையாளப்படுகின்றன. இந்த விடயம் அமைச்சரிடம் எழுப்பப்பட்ட போது, இந்த ஷரத்து வைத்தியசாலைகளை குறிப்பதாகும் என அவர் பதிலளித்தார். அப்படி இருந்தால் எழுத்துப்பூர்வமாக தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் அது இன்னும் கூறப்படவில்லை. இந்த விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டால், ஆயுர்வேத மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்கள் கொடுப்பனவுகள் அல்லது அரச சலுகைகளைப் பெறுவதில்லை. தமது சேவைகளுக்கு கட்டணம் வசூலிக்காத பாரம்பரிய மருத்துவர்களும் உள்ளனர்" என்றுமருத்துவர்நாணயக்காரகூறினார்.

பயிற்சிபெற்றநபர்களைவேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டியிருந்தால், ஆயுர்வேத மருத்துவர்கள் தங்கள் சேவைகளை திறம்பட வழங்குவதற்கான தமது திறமையைச் சமரசம் செய்யவேண்டி வரும் என்றும் அவர் கூறினார்.

இந்தசட்டத்திருத்தங்கள்பாரம்பரிய உள்நாட்டுமருத்துவத்தைஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டது. "புதிய சட்டம் பாரம்பரிய மருத்துவத்தில் இந்திய ஆயுள்வேதத்துடன் முழுமையாகக் கலந்தஒருதிருத்தப்பட்டநடைமுறையை அறிமுகப்படுத்துகிறது. புதிய சட்டம் நாடு முழுவதும் இந்த முறையை மேம்படுத்துவதற்கானநடவடிக்கைகளை எடுக்கமுயற்சிக்கிறது. நம்நாட்டில்சுதேச மருத்துவம் உள்ளது. இப்போது, இந்திய ஆயுள்வேதத்தைப் பயன்படுத்தி சுதேச மருத்துவத்தை ஒடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,'' என்றார் மருத்துவர் நாணயக்கார.

1961 ஆம் ஆண்டின் ஆயுள்வேத சட்டம் அதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளதாகவும், சமீபத்திய மாற்றங்கள் இதை இன்னும் சாத்தியமாக்குவதாகவும் தெரிகிறது.

இந்தச் சட்ட வரைவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பில் 6 திருத்தங்களை உயர் நீதிமன்றம் முன்வைத்துள்ளது. அவற்றைத் திருத்தினால் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டத்தை நிறைவேற்ற முடியும். இல்லையேல் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டியிருக்கும்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுதேசவைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, "1961ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆயுள்வேத சட்டத்தை திருத்துவதற்குத் தேவையானவற்றை நாடாளுமன்றத்தில்சமர்ப்பித்துள்ளோம். இந்த விவகாரத்தில் உயர் நீதிமன்றமும் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி ஆயுள்வேத சட்டத்தில் அத்தியாவசியத் திருத்தங்களைச்செய்வதுதான்எங்களின் நோக்கம். நாட்டின் ஏற்றுமதித் துறையை உயர்த்தவும், அன்னியசெலாவணியை உருவாக்கவும் தேவையான மருத்துவ தாவரங்களை வளர்ப்பது தொடர்பான இந்தச் சட்டத் திருத்தங்களுக்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. கூடுதலாக, ஆயுள்வேதத்தின் நிறுவன கட்டமைப்பில் அதன் செயல்திறனை அதிகரிக்க பல மாற்றங்களை நாங்கள் முன்மொழிந்துள்ளோம். எதிர்காலத்தில் அவற்றுக்கானநாடாளுமன்றஅங்கீகாரம் கிடைக்கும் என நம்புகிறோம்'' என ஜெயக்கொடி தெரிவித்திருந்தார்.

சுதேச மருத்துவ அமைச்சும் ஆயுள்வேத திணைக்களமும் இணைந்து வர்த்தக பெறுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய தொழில் துறையாக உள்ளூர் மருத்துவத்துறையை உயர்த்தும் நோக்கில் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஆயுள்வேத ஆணையர் மருத்துவர் எம்.டி.ஜே. அபேகுணவர்தன இந்தச் சட்டத்திருத்தம் தொடர்பில் பேசும்போது, "புதிய சட்டத் திருத்தம் தொடர்பாகப் பல தரப்பினர் உச்சநீதிமன்றத்தை அணுகினர். இதைத்தொடர்ந்து, உச்சநீதிமன்றம் திருத்தம்செய்யவேண்டியஷரத்துகளை எடுத்துரைத்தது. இந்த மாற்றங்கள் குறித்து நாடாளுமன்றமே முடிவெடுக்க வேண்டும்.

உள்ளூர் வைத்தியர்கள் மூலிகைகளைப் பயிரிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த மருந்துகளை இனிமேல் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுதேச வைத்திய நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்து தவறானது. இந்தச் சட்டம் உள்நாட்டு மருத்துவர்களின் பொறுப்புகளை கோடிட்டுக்காட்டவில்லை. தற்போதுள்ள சட்டம் உள்நாட்டு மருத்துவர்களின் உரிமைகளைப்பாதுகாக்கிறது. சமீபத்திய திருத்தம் ஆறு அம்சங்களில் மட்டுமே கவனம் செலுத்துகிறது, மீதமுள்ளவை மாறாமல் உள்ளன. நாங்கள் செயலை மாற்ற முடியாது"என்று அவர் மேலும் கூறினார்.

(மூலம்: டெய்லிமிரர்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# வெப்பம் காரணமாகப் பொதுமக்கள் அதிக நீராகாரம் அருந்த வேண்டும்

## வைத்தியர் யமுனானந்தா அறிவுரை



தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக வெப்ப நிலையுடனான வானிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகும்சந்தர்ப்பம் காணப்படுகின்றது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறிப்பாக மதிய வேளையில் அதிக வெப்பம் காணப்படுகின்றது. குறிப்பாக 11 மணியிலிருந்து 2 மணி வரையான காலப்பகுதியில் அதிகமான வெப்பநிலை காணப்படுகின்றது.

இந்தவெப்பஅதிகரிப்பால் ஏற்படக்கூடிய நோய்கள் என்று கூறும்போது, நீரிழப்பு ஏற்படும். அதனைதடுப்பதற்கு போதியளவு நீர் ஆகாரம் அருந்த வேண்டும்.

சாதாரணமாக வயது வந்தவர்கள் 2 தொடக்கம் 3 லீற்றர் நீரை சாதாரணமாக அருந்த வேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் அதனை விட அதிகளவு நீரை அருந்த வேண்டும்.

குறிப்பாக சிறுவர்கள் 2 தொடக்கம் 3 லீற்றர் நீர் அருந்துவது அவசியமாகும்.

அடுத்ததாக மதிய வேளைகளில் பிரயாணங்களைத்தவிர்ப்பதால்வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கலாம்.

குறிப்பாக மதிய நேரங்களில் விளையாட்டுகளில் ஈடுபடுவதை சிறுவர்கள் தவிர்ப்பது நல்லது. இந்த வெப்பநிலைஅதிகரிப்பு அடுத்த இரண்டு கிழமைகளுக்கு நீடிக்கலாம். அதேவேளை, போதியளவு நீர் உள்ள பழ வகைகளை உட்கொள்ள வேண்டும். வெள்ளரிக்காய் சாப்பிடலாம்.

பழங்கள் போதியளவு சாப்பிடும்பொழுதுவெப்பத்தால் ஏற்படும்பாதிப்புகள்குறைவாக இருக்கும். அதேபோல உடல் வெப்பநிலையை குறைப்பதற்காக நீராடுதல் குறிப்பாக காலை அல்லது மாலை வேலைகளில் நீராடுவதன் மூலம் உடல் வெப்பநிலையைக் குறைக்க முடியும். இதனால் வெப்பத்தால் ஏற்படக்கூடிய உடல் பாதிப்புகளையும் தவிர்க்கலாம்.

வெப்பமுள்ள சூழ்நிலையில் சில வேளைகளில் சுவாசத்தொற்று நோய் ஏற்படலாம். ஆகவே, பொது இடங்களுக்குச்செல்லும்போது அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாகதூசுகள் இருக்கும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இவை மிகவும் முக்கியமாகும். -என்றார். (05)

# ஐ.தே.க. செயலாளர் அத்தநாயக்க கிளிநொச்சிக்குத் திடீர் பயணம்

*ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தனாயக்க வெள்ளிக் கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.*

*இதன் போது கிளிநொச்சியில் அமைந்துள்ள சர்வமத ஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகளிலும் அவர் ஈடுபட்டார்.*

*இதனைத்தொடர்ந்து ஊடகச்சந்திப்பொன்றையும் அவர் ஏற்பாடு செய்திருந்தார். (05)*



# வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் யானை தாக்கி மட்டக்களப்பில் பரிதாபகர சாவு



மட்டக்களப்பில், வேத்துச்சேனை கிராமத்தில் வியாழக்கிழமை இரவு காட்டு யானைகள்புகுந்துஅட்டகாசம் செய்ததோடு, யானைகளை கட்டுப்படுத்துவற்கு களத்தில் இறங்கி முயற்சித்த வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களில் ஒருவர் யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரை பகுதியில் அமைந்துள்ள போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனை கிராமத்துக்குள் வியாழக்கிழமை இரவு காட்டு யானைகள்புகுந்துஅட்டகாசம் செய்துள்ளன.

இதனால் அந்த கிராம மக்கள் யானைகளை கட்டுப்படுத்துவதற்காக வெல்லாவெளியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களகாரியாலயத்துக்கு அறிவிக்க, குறித்த இடத்துக்கு விரைந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் யானைகளை கட்டுப்படுத்தி விரட்ட முயன்றுள்ளனர்.

அவ்வேளை கட்டுப்படாத காட்டுயானையொன்று அந்த உத்தியோகத்தர்களைஎதிர்த்து தாக்கியுள்ளது.

இதில் வனஜீவராசிகள் பாதுகாப்புதிணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலய உத்தியோகத்தர் ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காகிசம்பவஇடத்திலேயே உயிரிழந்தார்.

நுவரெலியாவைச்சேர்ந்த 30 வயதான செல்வராஜ் சிறிதரன் என்பவரே இதன்போது உயிரிழந்தவர் ஆவார். அத்தோடு, மற்றுமொரு உத்தியோகத்தர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் தற்போது மட்டக்களப்புபோதனாவைத்தியசாலையின்பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவில் மிக நீண்ட காலமாகவே காட்டு யானைகளின் தாக்குதல்களும் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளதோடு, காட்டு யானைகளால் அப்பகுதி மக்களின் வீடுகள், பயிரினங்கள் சேதமடைந்தது மட்டுமன்றி, அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (05)

# பரீட்சை மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு விசேட லீவு

2022ஆம்ஆண்டுக்கான கல்விபொதுத்தராதரசாதாரண பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 28 ஆம், 29 ஆம் திகதிகளில் விடுமுறைவழங்ககல்விஅமைச்சு தீர்மானித்துள்ளது. கடந்த 18 ஆம் திகதி கல்வி பொதுத்தராதர சதாரணதர பரீட்சை திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த அறிவித்தலை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட் டுள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2023இல் வெளியிடப்பெற்றது.